# எம்பிஎஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: RR டவர்ஸ் IV, சூப்பர் A, 16/17,
T V K இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை–600 032, தமிழ்நாடு

CIN: L22122TN1970PLC005795

Website: www.adi-mps.com Email: investors@adi-mps.com;

Tel: 044–49162222; Fax: 044–49162225

## 46வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

எம்பிஎஸ் லிமிடெட் (‘‘கம்பெனி’’) உறுப்பினர்களின் 46வது வருடாந்திர பொதுக்கூட்டம் செவ்வாய் கிழமை, ஜூலை 19, 2016 அன்று மாலை 3.00 மணிக்கு தி ரெயின்ட்ரீ ஹோட்டல்ஸ், 636, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 005ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்களை செயல்படுத்தும் விவரங்கள் அடங்கிய கூட்ட அறிக்கை, மார்ச் 31, 2016ல் முடிந்த நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள், தணிக்கையாளர் அறிக்கை மற்றும் இயக்குனர்களின் அறிக்கை ஆகியவை கம்பெனியில் பதிவு செய்த அல்லது டெபாசிட்டரிகளில் கிடைத்த இமெயில் முகவரியில் உள்ள உறுப்பினர்களுக்கு இமெயில் மூலம் ஜூன் 24, 2016 அன்றும், இமெயில் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அவர்கள் பதிவு செய்த தபால் முகவரிக்கு காகித நகல்கள் அனுமதிக்கப்பட்ட முறையில் ஜூன் 24, 2016 அன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் மேற்சொன்ன ஆவணங்கள் கம்பெனியின் வெப்சைட் (www.adi-mps.com)ட்டில் உள்ளது மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நாள் வரை அலுவல் நேரத்தில் சனிக்கிழமைகள் நீங்கலாக அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் (காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை) கம்பெனியின் பதிவு அலுவலகத்திலும் வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் கூட்டம் நடக்கும் நேரத்திலும் மேற்சொன்ன ஆவணங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 20, திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2015, மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதி 2015 விதி 44–ன்படி, வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் தவிர வேறு இடத்தில் இருந்தால் (‘தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு’) வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (சிடிஎஸ்எல்) மூலமாக அளிக்கப்படும் மின்னணு முறையில் வாக்குகளை பதிவு செய்யலாம் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலமாக வர்த்தகம் செயல்படுத்தப்படும். சிடிஎஸ்எல்–ன் வெப்சைட்டில் (www.evotingindia.com) வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு உள்ளது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு சனிக்கிழமை, ஜூலை 16, 2016 (காலை 9.00 மணி) (இந்திய நேரப்படி) தொடங்கி திங்கட்கிழமை, ஜூலை 18, 2016 (மாலை 5.00) (இந்திய நேரப்படி) அன்று முடிவடைகிறது. இந்த காலத்தில் உறுப்பினர்கள் மின்னணு மூலம் வாக்களிக்கலாம். அதன்பிறகு சிடிஎஸ்எல்–லினால் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செயலிழக்க செய்யப்படும். மேற்சொன்ன நாள் மற்றும் நேரத்திற்கு பின்னர் மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் வாக்குச்சீட்டு மூலமாக வாக்களிக்க வசதி செய்யப்படும். கூட்டத்திற்கு ஆஜராகும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செய்யாத பட்சத்தில் வாக்குச்சீட்டு மூலமாக கூட்டத்தில் வாக்களிக்கலாம். வருடாந்திர கூட்டத்திற்கு முன்பாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை செய்தவர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் வாக்களிக்க உரிமை கிடையாது.

செவ்வாய்க்கிழமை, ஜூலை 12, 2016 (‘‘கட் ஆப் தேதி’’) அன்று கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் வைத்துள்ள சமபங்குகள் விகிதத்தில் உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமை இருக்கும். கட் ஆப் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் பதிவு செய்துள்ளவர்கள் அல்லது டெபாசிட்டரிகளினால்

பராமரிக்கப்படும் பயனுள்ள உரிமையாளர்கள் பதிவேட்டில் உள்ளவர்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களின் மீதும் வாக்களிக்க தகுதியானவர்கள் ஆவர். அவர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தபால் ஓட்டு மூலம் வாக்களிக்கலாம்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனியின் உறுப்பினர்களானவர்கள் மற்றும் கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்துள்ளவர்கள் **helpdesk.evoting@cdslindia.com or investor@cameoindia.com**க்கு கோரிக்கை விடுத்து யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்று வாக்களிக்கலாம்.

வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெறுவதற்கான விவரமான நடைமுறைகள் உள்ளது. மேலும் கம்பெனியின் வெப்சைட்டிலும் உள்ளது. மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே சிடிஎஸ்எல்–ல் பதிவு செய்திருந்தால் அவர்கள் தற்போதைய யூசர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பயன்படுத்தி தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்கலாம். மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் அது குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை அணுகலாம் மற்றும் **www.evotingindia.com**ல் உதவிப் பிரிவின் கீழ் உள்ள மின்னணு வாக்குப்பதிவு உபயோக கையேட்டை பார்வையிடலாம் அல்லது **helpdesk.evotingindia@cdslindia.com**க்கு இமெயில் மூலமாக அணுகலாம். ஒருவேளை மின்னணு வாக்குப்பதிவு வசதி தொடர்பான குறைகள் ஏதேனும் இருப்பின், அது குறித்து திரு. ராகேஷ் தல்வி, துணை மேலாளர், சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், (சிடிஎஸ்எல்), 17வது தளம், பிரோஸ் ஜீஜீபாய் டவர்ஸ், தலால் தெரு, கோட்டை, மும்பை–400 001, **helpdesk.evotingindia@cdslindia.com,** தொலைபேசி 022–22728588 அவர்களை அணுகலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க தகுதி உள்ள நபர்கள் நேரடியாகவோ/பதிலி/அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி (கார்ப்பரேட் உறுப்பினர்களாக இருப்பின்) மூலமோ வாக்களிக்கலாம். பதிலிக்காக நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் கூட்டத்தில் ஆஜராகி வாக்களிக்க தகுதி உள்ள நபர் கையொப்பமிட்டு அதனை வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் டெபாசிட் செய்ய வேண்டும்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
எம்பிஎஸ் லிமிடெட்டுக்காக

ஒப்பம்/–

இடம் : நொய்டா — ஹிதேஷ் குமார் ஜெயின்

தேதி : ஜூன் 24, 2016 — DGM––சட்டம் மற்றும் கம்பெனி செயலாளர்